**பத்திரிக்கைக் குறிப்பு**

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**ஜனவரி 23, 2006**

**கணக்குடையோர் பெயரில் வழங்கப்படும் காசோலைகளை மூன்றாவது நபர் கணக்கில் வரவு வைப்பதைத் தடுத்தல்**

(சில தனிநபர்களும்/அமைப்புகளும்) தொடக்க பொதுவழங்கல் செயல்முறையினை (IPO)த் தவறாக பயன்படுத்துவதைக்கருத்தில் கொண்டும் இதனைப் பற்றிய இந்த பிணையங்கள் மற்றும் பரிமாற்றக் கழக(SEBI) த்திலிருந்து பெறப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து இந்திய ரிசர்வ் வங்கி சில வங்கிகளில் இந்தச் செயல்முறை பல்வேறு நபர்களால் தவறாகச் செயல்படுத்துவதற்குக் கையாளப்படும் செயல்முறைகளைப் பற்றி விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டது. தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும் வங்கிகள் தனியார் கணக்குடையோர் கணக்குகளில் வரவு வைக்காமல் துணையாளர்கள் அல்லது DP தருவோரின் வேண்டுதலின்பேரில் தரகர்களின் கணக்குகளில் வரவு வைப்பது தெரியவந்தது. இது பணம் செலுத்தும் முறையைத் தவறாகப் பயன் படுத்துவதிலும் தவறாக நடைமுறைகள் செயல்படுத்துவதற்கு வாய்ப்பாக உருவானது. வங்கிகள் கணக்குடையோர் காசோலைகளைப் பெறுவதில் உள்ள செயல்முறையிலிருந்து வழுவாமல் இருந்திருந்தால் இந்தத் தவறு நடந்திருக்காது. இந்த வழுவல் முறை ஒரு சிறந்த சந்தைச்செயல்பாடு என்று போற்றப்பட முடியாது. ஏனெனில் இதனால் வங்கிகள் பல்வேறு இடர்களுக்கு உள்ளாக நேரிடும்.

கணக்குடையோர் காசோலைகளை அந்த காசோலையில் குறிப்பிடப் பட்டுள்ள பெயரைத் தவிர வேறு யார்பெயரிலும் அந்தக் காசோலையைச் செலுத்துவதைத் தடைசெய்வது இன்றியமையாதது என்று ரிசர்வ் வங்கி கருதியது. இதனைத் தொடர்ந்து வங்கிகள் கணக்குடையோர் காசோலைகளை அந்தப் பெயரில் தவிர, வேறு எந்த நபர் பெயரிலும் பெறக்கூடாது என்று வங்கிகளுக்குக் கட்டளையிட்டுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கை இந்திய ரிசர்வ் வங்கி இணையதளத்தில் (www.rbi.org.in) வெளியிடப்பட்டுள்ளது.

பி.வி. சதானந்தன்
மேலாளர்.

**பத்திரிக்கை வெளியீடு 2005-2006/556**